# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2019

**தரம்:11** **கத்தோலிக்கத் திருமறை** **நேரம்: 3.00 மணித்தியாலம்**

| சுட்டெண்:................................................................................ | 14 | T | I | |
|---|---|---|---|---|

**கவனிக்க:**

I.எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

II. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

III. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தின் உள்ளே புள்ளடியை (X) இடுக.

## பகுதி 1

**மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. திருவிவிலியத்தில் முதல் ஐந்து நூல்களின் தொகுப்பு
   1. ஞானநூல்கள் 2. விடுதலைப்பயணம் 3. தோரா 4. சீராக்கின் ஞானம்

2. புனித லூக்கா நற்செய்தி, திருத்தூதர்பணி நூல் ஆகியவை யாருக்கு அர்ப்பணிக்கப்பட்டது?
   1. தெயோபில் 2. கமாலியேல் 3. யோவான் 4. மத்தேயு

3. இஸ்ராயேல் மக்கள் வழிபாட்டின் போது பின்பற்ற வேண்டிய சட்டங்கள், ஒழுங்குகள் பற்றி கூறும் நூல்
   1. இணைச்சட்டம் 2. லேவியர் 3. மோசேயின் சட்டம் 4. சீராக்

4. ஞான இலக்கியத்தில் அடங்கும் நூல் அல்லாதது
   1. திருப்பாடல்கள் 2. எசாயா 3. யோபு 4. சபைஉரையாளர்

5. படைப்பு பற்றி இரண்டாம் கதை பற்றி கூறும் பாரம்பரியம்
   1. யாவே பாரம்பரியம் 2. எலோகிம் பாரம்பரியம்
   3. இணைச்சட்ட பாரம்பரியம் 4. குருக்கள் பாரம்பரியம்

6. யூத விவிலியத்தில் உள்ள நூல்களின் மொத்த எண்ணிக்கை
   1. 27 2. 66 3. 39 4. 73

7. கிறிஸ்தவர்கள் கொண்டாடும் விழா அல்லாதது
   1. பாஸ்காவிழா 2. பெந்தகோஸ்தேவிழா
   3. கிறிஸ்மஸ் விழா 4. கூடாரவிழா

8. கத்தோலிக்கத் திருச்சபையின் முதல் மறைசாட்சியாக விளங்குபவர்
   1. பேதுரு 2. பவுல் 3. ஸ்தேவான் 4. யாக்கோபு

9. எபிரேய மொழியில் எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டில் கிரேக்க மொழியில் எழுதப்பட்டது…………அரசன் காலத்தில் ஆகும்.

   1. அந்தியோக்கு எப்பிபானுஸ் 2. ஏரோது அகிரிப்பா
   3. அகுஸ்துஸ்சீசர் 4. 2ம் தொலமி

10. பேதுரு என்பதன் பொருள்
   1. பாறை 2. இரும்பு 3. கயமை 4.வன்மை

A.எசாயா B.எரேமியா C.எசேக்கியேல்
D.நத்தான் E.ஒசேயா

11. ஆலயத்தில் காட்சி மூலம் அழைக்கப்பெற்ற இறைவாக்கினர்
   1. A 2. B 3. C 4. D

12. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்.
   1. D 2. E 3. C 4.A

13. எழுத்து வடிவம் பெற்ற சிறிய இறைவாக்கினர்.
   1. A 2. B 3. E 4.D

14. "தாய் வயிற்றில் உன்னை உருவாக்கும் முன்பே அறிந்திருந்தேன்" என்ற இறைவார்த்தைக்குரிய இறைவாக்கினர்
   1. A 2. B 3. C 4. D

15. "பபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து சொந்த நாட்டுக்குச் செல்வோம்" என்ற நம்பிக்கையை இஸ்ராயேல் மக்களுக்கு கொடுத்த இறைவாக்கினர்
   1. A 2. B 3. C 4. D

16. பழைய ஏற்பாட்டில் உன்னத குருவாக இருந்தவர்
   1. மோசே 2. லேவி 3. மெல்கிசதேக் 4. ஆபிரகாம்

17. தவக்காலத்திலும் பாஸ்கா காலத்திலும் பயன்படுத்தும் நற்செய்தி
   1. யோவான் 2. லூக்கா 3. மாற்கு 4. மத்தேயு

18. நீரோ மன்னனின் துன்புறுத்தலுக்கு உள்ளான கிறிஸ்தவர்களை ஊக்கப்படுத்துவதற்காக எழுதப்பட்ட நற்செய்தி
   1. லூக்கா 2. யோவான் 3. மத்தேயு 4. மாற்கு

19. லூக்கா நற்செய்தியின் அடையாளம்
   1. எருது 2. கழுகு 3. சிங்கம் 4. மனிதமுகம்

20. இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கும் சொல்
   1. லோகோஸ் 2. லிட்டர்ஜியா 3. லாஓஸ் 4. பரூசியா

21. புனித யோசவ்வாஸ் ஆற்றிய புதுமைகளில் ஒன்று
1. கடல் மீது நடந்தார்
2. குருடருக்கு பார்வை கொடுத்தார்
3. புயல் காற்றை அடக்கினார்
4. மதம் பிடித்த யானையை அடக்கினார்

22. கூற்று : உன் மகப்பேற்றின் வேதனையை மிகுதியாக்குவேன்.
காரணம் : இறைவனின் கட்டளையை மீறுதல்
1. கூற்று பிழை, காரணம் சரி
2. கூற்று சரி, காரணம் பிழை
3. கூற்றும் காரணமும் சரி
4. கூற்றும் காரணமும் பிழை

A- ஆதிப்பெற்றோர்
B- நோவா
C- திருமுழுக்கு யோவான்
D- மோசே
E- காயீன்

23. ''மண்ணுலகில் நீ நாடோடியாய் அலைந்து திரிவாய்'' இக்கூற்றுக்கு உரியவர்
1. A 2. B 3. D 4. E

24. ''அவரின் பரம்பரையில் அவரே குற்றமற்றவர்'' அவா் இறைவனோடு நல்லுறவை வளா்த்திருந்தார். இக்கூற்றுக்குப் பொருத்தமானவர்
1. A 2. B 3. C 4. E

25. கடவுளின் கட்டளையை மீறியதால் துன்பத்தினை அனுபவித்தவர்கள்
1. B 2. D 3. E 4. A

26. ''இதோ நான் என் தூதனை அனுப்புகிறேன். அவர் எனக்கு முன் வழியை ஆயத்தம் செய்வார்'' இங்கு தூதன் எனக் குறிப்பிடப்படுபவா்
1. C 2. E 3. B 4. D

27. பல்வேறு தடைகள் சவால்கள் மத்தியில் இறைவனின் அழைப்பை ஏற்றுக் கொண்டவர்
1. C 2. D 3. E 4. B

28. இறைசெய்தியை நம்பாததால் இறைவனால் தண்டிக்கப்பட்டுப் பேச்சை இழந்தவர்
1. பார்வையற்றவர் 2. செக்கரியா 3. காயீன் 4. யோசேப்பு

29. உலகம் முடிவுவரை இறையாட்சியைப் பரப்பும் பணி ஒப்படைக்கப்பட்டிருப்பது
1. திருத்தந்தையிடம்
2. பொதுநிலையினரிடம்
3. ஆயர்களிடம்
4. திருச்சபையிடம்

30. இறைவார்த்தையைக் கேட்டவுடன் இதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்பவர்கள்
1. வழியோரம் விழுந்த விதைகள்
2. மண்ணில்லாப் பாதைகளில் விழுந்த விதைகள்
3. நல்ல நிலத்தில் விழுந்த விதைகள்
4. முட்செடிகளிடையே விழுந்த விதைகள்

31. மூவொரு கடவுளின் வெளிப்பாடு இடம்பெற்ற சம்பவமாகக் கருதக்கூடியது
   1. இயேசு கடல் மீது நடந்தது
   2. இலாசர் உயிர் பெற்றது
   3. இயேசு திருமுழுக்குப் பெற்றது
   4. இயேசு அசுத்த ஆவியை விரட்டியது.

32. இயேசுவை அலகை சோதித்தபோது, மூன்றாவது சோதனை நமக்குத்தரும் செய்தி
   1. சமுதாய நலனுக்காகச் செயற்படல்
   2. இறைவனை நம்புதல்
   3. புகழை விரும்பி செயற்படக்கூடாது
   4. தன்னலம் இன்றி வாழக்கூடாது

33. மலைப்பொழிவில் இடம்பெறும் படிப்பினைகளில் அடங்காதது.
   1. எட்டுப்பேறுகள்
   2. உப்பும் ஒளியும்
   3. பழிவாங்குதல்
   4. பெற்றோரை மதித்தல்

34. தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள்
   1. இரக்கம் பெறுவர்
   2. ஆறுதல் பெறுவர்
   3. கடவுளைக் காண்பர்
   4. நிறைவு பெறுவர்

35. இறையாட்சிக்கு உட்படத் திருமுழுக்குப் பெற வேண்டும் என்று இயேசு கூறியது
   1. பேதுருவுக்கு
   2. கொர்னேலியுக்கு
   3. மகதலாமரியாவுக்கு
   4. நிக்கதேமுக்கு

36. திருமுழுக்கின்போது உயிர்த்த கிறிஸ்துவின் அடையாளமாக இருப்பது
   1. வெண்ணிற ஆடை
   2. தண்ணீர்
   3. பாஸ்காதிரி
   4. திருத்தைலம்

37. எந்தவொரு கத்தோலிக்கக் குருவானவருக்கும் உறுதிப்பூசுதல் வழங்க அதிகாரம் கிடைப்பது
   1. ஒருவர் நோயுற்றிருக்கும்போது
   2. விபத்தின்போது
   3. ஒருவர் ஊனமாக இருக்கும்போது
   4. ஒருவர் மரணத் தருவாயில் இருக்கும்போது

38. வனத்துப் பிதாக்களில் முதன்மையானவராகக் கருதப்படுபவர்
   1. தேப்ஸ் சின்னப்பர்
   2. வனத்து அந்தோனியார்
   3. பக்கோமியாஸ்
   4. பசில்

39. துறவற வார்த்தைப்பாடுகளுக்குள் உள்ளடங்காதது
   1. ஏழ்மை
   2. கற்பு
   3. பொறுமை
   4. கீழ்ப்படிவு

40. நோயில் பூசுதல் தொடர்பாக திருச்சபையின் படிப்பினையாகக் கொள்ளக்கூடியது
   1. தொடக்கத் திருச்சபையில் இருந்துள்ளமை.
   2. கிழக்கு மேற்கு சபைகளில் நோயாளரை தைலத்தால் பூசும் வழக்கம் இருந்துள்ளது
   3. திருத்தூதர்கள் நோயாளரைக் குணமாக்கினர்.
   4. நோயாளியின் மீட்புக்கு உதவுதற்காக குணமளிக்கும்படி இறைவனிடம் வேண்டப்படுகிறது.

(20x2=40 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2019

**தரம்:11** **கத்தோலிக்கத் திருமறை** **நேரம்: 3.00 மணித்தியாலம்**

| சுட்டெண்:…………………………………………………………………… | 14 | T | II | |
|---|---|---|---|---|

**கவனிக்க:**

I. முதலாம் வினா கட்டாயமானது, ஏனைய வினாக்களிலிருந்து நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

II. முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

### பகுதி – II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடைதருக.**

**01.**

1. இறைவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குறுதிகள் எவை?
2. இறையன்பை வெளிப்படுத்தும் கட்டளைகள் எவை?
3. பொதுக்காலத்தில் கொண்டாடப்படும் முக்கியமான விழாக்கள்?
4. இஸ்ராயேலரின் பலிகளுக்காக பயன்படுத்தப்பட்டவைகள் எவை?
5. யூதப்பாஸ்காவில் முக்கியம் பெறும் உணவுகள் எவை?
6. லூக்கா நற்செய்திக்கு கொடுக்கப்பட்ட வேறுபெயர்கள் எவை?
7. துறவற சபைகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
8. பொதுக்குருத்துவத்தைப் பெற்ற அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் கொடுக்கப்பட்ட மூன்று விதமான பணிகள் எவை?
9. குணமளிக்கும் அருளடையாளங்களைக் குறிப்பிடுக?
10. இஸ்ராயேல் மக்கள் விடுதலைப் பயணத்தில் இறைபராமரிப்பை அனுபவித்த சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக? (10x2=20 புள்ளிகள்)

**02.**

1. ஐந்நூலுக்கு கொடுக்கப்பட்ட வேறு பெயர்கள் எவை?
2. ஐந்நூல் உருவாக்கத்திற்கு பங்களிப்புச் செய்த பாரம்பரியங்கள் மூன்றினைக் குறிப்பிடுக?
3. திருவிவிலியத்தில் ஐந்நூலின் முக்கியத்துவங்களைக் குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)

**03.**

1. இறைவன் உடன்படிக்கை செய்துகொண்ட நபர்கள் பற்றி குறிப்பிடுக.
2. இறைவன் எகிப்தியருக்கு கொடுத்த பத்துத் தண்டனைகளில் முதல் மூன்று தண்டனைகளையும் கூறுக.
3. இஸ்ராயேல் மக்கள் இறையனுபவங்களை அனுபவித்த சந்தர்ப்பங்களைப் போல் நீரும் இறையனுபவங்களைப் பெற்ற சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக?

(2+3+5=10 புள்ளிகள்)

**04.**

1. புதுமைகள் இடம்பெறுவதற்கு நம்பிக்கை அவசியமாகும் என்பதை வெளிப்படுத்தும் இரண்டு புதுமைகளைக் குறிப்பிடுக.
2. இயேசுவை சோதிக்க விரும்பிய அலகை அவரிடம் கூறிய மூன்று விடயங்களும் எவை?
3. நீர் உம்முடைய வாழ்வில் எதிர்கொண்ட சோதனை ஒன்றினை குறிப்பிட்டு அதனை எவ்வாறு வெற்றிகொண்டீர் என்பதனையும் எடுத்துக்கூறுக?

(2+3+5=10 புள்ளிகள்)

**05.**

1. சீடர்களை மறைத்தூதுப் பணிக்கு அனுப்பிய இயேசு அவர்களுக்குக் கூறிய அறிவுரைகள் இரண்டைக் குறிப்பிடுக?
2. இறையாட்சி மதிப்பீடுகள் பற்றி விளக்குவதற்கு இயேசு கூறிய உவமைகள் எவை?
3. இலங்கையில் பின்பற்றப்படும் ஒழுக்கவிழுமியங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)

**06.**

1. மனம் வருந்துவதற்கான வழிகள் இரண்டைக் குறிப்பிடுக.
2. ஒப்புரவு அடையாளத்தைப் பெற விரும்பும் ஒருவர் பின்பற்றவேண்டிய முதல் படிமுறைகள் மூன்றினைக் குறிப்பிடுக.
3. திருநிலையினர் தொடர்பில் பொதுநிலையினரின் கடமைகள் ஐந்தினைத் தருக.

(2+3+5=10 புள்ளிகள்)

**07.**

பின்வருவனவற்றில் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக?

1. திருமுழுக்கு யோவானின் மறைத்தூதுப்பணி
2. நோயில்பூசுதல் சடங்கு
3. எட்டுப்பேறுகள்
4. விதைப்பவர் உவமை

(10 புள்ளிகள்)

**இரண்டாம் தவணைப் பரீட்சை 2019**
**கத்தோலிக்க திருமறை தரம் - 11**
**(புள்ளித்திட்டம்)**

பகுதி 1

| | | | |
|---|---|---|---|
| 1. 3 | 11. 1 | 21. 4 | 31. 4 |
| 2. 1 | 12. 1 | 22. 3 | 32. 3 |
| 3. 2 | 13. 3 | 23. 1 | 33. 4 |
| 4. 2 | 14. 2 | 24. 2 | 34. 3 |
| 5. 1 | 15. 3 | 25. 4 | 35. 1 |
| 6. 3 | 16. 3 | 26. 1 | 36. 3 |
| 7. 4 | 17. 1 | 27. 2 | 37. 4 |
| 8. 3 | 18. 2 | 28. 2 | 38. 1 |
| 9. 4 | 19. 1 | 29. 4 | 39. 3 |
| 10. 1 | 20. 4 | 30. 2 | 40. 2 |

(20x2=40 புள்ளிகள்)

பகுதி 2

**01.**

1. ஒரு நாடு, ஒரு இனம், இறையாசீர்
2. 1-3 கட்டளைகள்
3. இலங்கை அன்னையின் பெருவிழா, நற்கருணை விழா, திருஇருதய விழா, கிறிஸ்து அரசர் பெருவிழா
4. தானிய வகைகள், பான வகைகள், மிருகங்கள்
5. பாஸ்கா செம்மறி, புளியாத அப்பம், கசப்புக்கீரை, திராட்சை ரசம்
6. பாடுகளின் நற்செய்தி, பெண்களின் நற்செய்தி, தூய ஆவியின் நற்செய்தி, செபத்தின் நற்செய்தி
7. குருத்துவம் சார்ந்த துறவற சபை, குருத்துவம் சாராத துறவற சபை
8. மேய்ப்புப்பணி, குருத்துவப்பணி, இறைவாக்குப் பணி
9. ஒப்புரவு நோயிற்பூசுதல்
10. மன்னா உணவு வழங்கப்பட்டமை, தண்ணீர் கிடைத்தமை, பகலில் மேகத்தூணும் இரவில் நெருப்புத் தூணுமாக இருந்து பராமரித்தமை.

(10x2=20 புள்ளிகள்)

**02.**

1. தோரா, மோசேயின் சட்டம், பஞ்சாகமம்
2. யாவே, எலோகிம், இணைச்சட்டம், குரு
3. 1. அதிகமான இறையியல் சிந்தனை கொண்ட நூல்
   2. ஒரே இறைவனை மட்டுமே ஆராதிக்க வேண்டும் என எடுத்துரைக்கிறது.
   3. இறைவன் உலக மீட்புக்காக இஸ்ராயேல் இனத்தை தெரிந்து கொண்டார்.
   4. இறைவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டது.
   5. பலவீனமானவர்கள் இறைவனைச் சார்ந்து வாழ்ந்து ஆசீரைப் பெற வேண்டும்.

(2+3+5=10 புள்ளிகள்)

**03.**

1. ஆதிப்பெற்றோர், நோவா, ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு, இஸ்ராயேல் மக்கள்
2. தண்ணீர் இரத்தமாதல், தவளைகள் பெருக்கம், கொசுக்களின் தொல்லை

3. மாணவர்களின் விடைக்கேற்ப புள்ளியிடவும்

(2+3+5=10 புள்ளிகள்)

**04.**

1. 1. பார்வையற்றவர் பார்வை பெறுதல்
   2. இரத்தப் போக்குடைய பெண் நலமடைதல்
2. 1. நீர் இறைமகன் என்றால் இந்தக்கல் அப்பமாகும்படி கட்டளையிடும்
   2. நீர் என்னை வணங்கினால் அனைத்தும் உம்முடையவையாகும்
   3. நீர் இறைமகன் என்றால் இங்கிருந்து கீழே குதியும்
3. மாணவர்களின் விடைக்கேற்ப புள்ளியிடவும்

(2+3+5=10 புள்ளிகள்)

**05.**

1. 1. பணப்பையோ, வேறு பையோ மிதியடிகளோ எதுவும் எடுத்துச் செல்ல வேண்டாம்
   2. வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்த வேண்டாம்
   3. நீங்கள் எந்த வீட்டுக்குச் சென்றாலும் "இந்த வீட்டுக்கு அமைதி உண்டாகுக" என முதலில் கூறுங்கள்
2. 1. விதைப்பவன் உவமை
   2. வயலில் தோன்றிய களைகள் உவமை
   3. கடுகு விதை, புளிப்பு மாவு, புதையல் உவமை, வலை உவமை
3. 1. கரங்களைக் குவித்து "கடவுளுக்கு தோத்திரம்" எனக் கூறுதல்.
   2. ஒரு வேலையை ஆரம்பிக்கும் முன்னர் செபித்தல், சிலுவை அடையாளம் வரைதல்.
   3. பெற்றோர், பெரியோர், ஆசிரியர்களின் பாதம் பணிந்து வணங்குதல்.
   4. மற்றவர்களின் தனிப்பட்ட விடயங்களுக்கு மதிப்பளித்தல்.
   5. பெரியோரை மதித்தல்

(2+3+5=10 புள்ளிகள்)

**06.**

1. செபம், நோன்பு, தர்மம்
2. 1. ஆன்மசோதனையில் ஈடுபடுதல்
2. செய்த பாவங்களுக்காக மனம் வருந்துதல்
   3. மீண்டும் அப்பாவங்களைச் செய்வதில்லை என உறுதியான தீர்மானம் எடுத்தல்.
3. 1. அவர்களுக்காகச் செபித்தலும், அவர்களை மதித்தலும்
   2. பங்குச் சபையின் பணிகளில் உதவுதல்
   3. இறையரசைப் பரப்பும் பணிகளில் உதவுதல்
   4. மறைக்கல்விப் பணிகளில் ஈடுபட்டு உதவுதல்.
   5. திருவழிபாட்டுச் செயல்களில் உதவுதல்.
   6. பொதுப் பணிகளில் உதவுதல்.

(2+3+5=10 புள்ளிகள்)

**07.**

1. திருமுழுக்கு யோவானின் மறைத்தூதுப்பணி- பக்கம் 50
   2. நோயில்பூசுதல் சடங்கு- பக்கம் 82
   3. எட்டுப்பேறுகள் - பக்கம் 65
   4. விதைப்பவன் உவமை- பக்கம் 63

(10 புள்ளிகள்)